2024-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 28-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொருள் எண் .1**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 94 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. தற்போது நெடுஞ்சாலைத் துறையினால் உயர்மட்ட மேம்பாலப் பணி நடைபெற்று வருவதால், கட்டுமானப் பணிகளின் போது ஆழ்துளை குழாய் கிணற்றில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு, பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, கூடுதலாக 2 எண்ணிக்கை 7.50 H.P மற்றும் 4 எண்ணிக்கை 5 H.P மின்மோட்டாரினை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து அவ்வப்போது ஏற்படும் பழுதான மின்மோட்டார்களுக்கு மாற்றாக புதியதாக 6 மோட்டார்கள் கொள்முதல் செய்யும் மின்மோட்டாரினை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மற்றும் அதற்குண்டான உபகரணங்கள் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துக்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/-ஐ குடிநீர் நீதியில் லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மேற்படி பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோப்பு எண்.1282/2014/இ1**

**தீர்மான எண்.206 நாள்.28.10..2024.**

**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள 283 சாலைகளில் 15வது மத்திய நிதிக்குழு (2022-23, 2023-24), தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (2024-25), சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-24, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-24 ஆகிய திட்டங்களில் கீழ் 181 சாலைப்பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது இந்நகராட்சிப் பகுதியில் அம்ரூத் 2.0 (2022-23) குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணி ரூ.1777.00 லட்சத்தில் நடைபெற்று வருகிறது. மேற்காணும் அம்ரூத் 2.0 குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணிக்காக மதிப்பீட்டில் உள்ள 45.02 கி.மீ நீளத்திற்கு மேல் கூடுதலாக சுமார் 10 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டு வரப்படுகிறது. ஆகையால் மேற்காணும் சாலைகள் மேம்பாட்டு திட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 181 எண்ணிக்கை சாலைகள் தவிர அம்ரூத் 2.0 குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணிக்காக 10 கி.மீ நீளத்திற்கு கூடுதலாக மேற்கொள்ளபடவுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கப்படவுள்ள சாலைகளுக்கு கீழ்காணும் விபரப்படி மீதமுள்ள 102 சாலைப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.292.30 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | சாலைகளின் விபரம் | | | சாலைகளின் மொத்த எண்ணிக்கை | சாலையின் நீளம் கி.மீ | அகலம் மீ | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தார் சாலை | சிமெண்ட் சாலை | பேவர் பிளாக் | | | | |
| 1 | சாலை (Road) | 1 | 4 | 6 | 11 | 1.282 | 4.75 (Avg) | 75.30 |
| 2 | தெருக்கள் | 6 | 45 | - | 51 | 4.125 | 4.50 | 162.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (Street) | | | | | | (Avg) | |
| 3 | தெருக்களின் சந்து (Lane) | - | 40 | - | 40 | 2.333 | 2.10 (Avg) | 55.00 |
| | மொத்தம் | 7 | 89 | 6 | 102 | 7.740 | | 292.30 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1285/2024/இ1

தீர்மான எண்.207 நாள்.28.10..2024.

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்3</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் 01.10.2024 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி ஆய்வுக்கூட்ட அறிவுரைகளில், நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் செலுத்த வேண்டிய 2024-2025 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் அரையாண்டிற்கான சொத்துவரியை வருகிற 31.10.2024 ம் தேதிக்குள் செலுத்துபவர்களுக்கு 5 சதவீதி ஊக்கத் தொகை வழங்கப்படுமென தமிழக அரசு அறிவிக்கப்பட்டுள்ளதை அனைத்து பகுதி பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில் பிளக்ஸ் பேனர் 8' x 8' ன் மூலம் 4 எண்ணிக்கையில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்கப்பட்டதற்கான ஆகும் செலவினத் தொகை ரூ.10,300/-ஐ பொதுநிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1238/2014/அ1

தீர்மான எண்.208 நாள்.28.10..2024.

அனுமதிக்கப்பட்டது

(ஒம்) மோ.செல்வராஜ்,
தலைவர்,
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

/உண்மை நகல்/

ஆணையாளர்
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.